Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 55

வியாழக்கிழமை
20 ஜனவரி 2022

தை 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

## பிரிட்டன் அமைச்சர் வடக்குக்கு வருகை

யாழ்ப்பாணம், ஜன. 20
ஐக்கிய நாடுகள் மற்றும் பொதுநலவாய இராஜாங்க அமைச்சரான விம்பிள்டன் பிரபு தாரிக் அஹமத் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தார். 15

# நாங்கள் வந்தால் மோடிக்கு தர்மசங்கடம்!

## சந்திப்பை ஒத்திவைத்தமைக்கு சம்பந்தன் புதுக்காரணம்



யாழ்ப்பாணம், ஜனவரி 20
நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இந்தியாவில் இருக்கும் சமயத்தில் நாங்களும் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) அங்கு வந்து இந்திய அரசை தர்மசங்கடத்துக்குள்ளாக்க விரும்பவில்லை. அதனாலேயே அந்தப் பயணத்தை அப்போது ஒத்திப்போடும் முடிவை எடுத்தோம். இப்போதும் இந்தியப் பிரதமரின் சந்திப்புக்காகக் காத்திருக்கின்றோம். 15

## போருக்கான காரணிகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை

### கூட்டமைப்பு விசனத்துடன் சுட்டிக்காட்டியது

கொழும்பு, ஜன. 20
2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதும் சமாதானம் மலர்ந்துவிட்டதாக ஜனாதிபதி கூறினார். ஆம்! போர் முடிந்து 15

## மின்வெட்டு உறுதி

கொழும்பு, ஜன. 20
நாடளாவிய ரீதியில் 1 மணித்தியாலம் 45 நிமிடங்களுக்கு மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை பொறியி 14

## வடக்கு அமைச்சுக்களின் செயலர்கள் அதிரடி மாற்றம்

### ஆளுநரின் செயலர் நியமிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 20
வடமாகாண அமைச்சின் செயலாளர்கள் அதிரடியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். வடக்கு ஆளுநரின் உத்தரவின்படி, மாகாண நிர்வாகத்தில் இந்தத் தடாலடி மாற்றங்கள் மேற்கொள்ளப் 14

## பலாலி விமான நிலையத்தில் புதிய முனையம் அமைக்குக!

### இலங்கைக்கான கடனுதவியில் இந்தியா நிபந்தனை

யாழ்ப்பாணம், ஜன. 20
பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் 15

## வீதி விடுவிப்பு என்ற பெயரில் தனியார் காணி ஆக்கிரமிப்பு!!

### உரிமை கோருகிறார் அங்கஜன்

யாழ்ப்பாணம், ஜன. 20
யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்குச் செல்லும் கட்டுவன்-மயிலிட்டி வீதியின் விடுவிக்கப்படாமலிருந்த 400 மீற்றர் வீதி 15

## வர்த்தகக் கண்காட்சி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 20
யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 12 ஆவது தடவையாக நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் 15

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள்

## புலிகளிடமிருந்து பாதுகாக்கவே இந்தியாவுக்கு வழங்கப்பட்டதாம்

கொழும்பு, ஜன. 20
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தாக்குதலில் இருந்து பாதுகாத்துக்கொள்வதற்காகவே 15

## தனியார் மருத்துவமனையில் சத்திரசிகிச்சையால் உயிரிழப்பா?

### ஒரு வாரத்தில் இரண்டாவது சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 20
திருநெல்வேலியில் அமைந்துள்ள பிரபலமான தனியார் மருத்துவமனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இருதய 14

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகர் சந்தை
12
JITF 2022
21 22 23
ஜனவரி January
10.00am - 8.00pm
முற்றவெளி மைதானம்
இன்னும் 1 நாள் மட்டுமே

TRIPLE BLASTER
இப்போது புதுப்பொழிவுடன்!
Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு
எந்தவொரு வலையமைப்பிற்கும்* 1,000 நிமிடங்கள் 1,000 SMS
Anytime Data 1.5GB
மாதத்திற்கு ரூ.498/-
(மேலதிக வரிகள் இல்லை)
செயற்படுத்தல் ரூ. 498/- இனை ரீலோட் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம்
Dialog
எதிர்காலம் இன்றே.
TRC/D/PRG/21/09

noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கிணற்றுக்குள் தவறிவீழ்ந்து சிறுமியொருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 20

கரணவாய், அண்ணாசிலையடிப் பகுதியில் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து சிறுமியொருவர் உயிரிழுந்தார். நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் ஜெகன் கஜனிகா (வயது - 16) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார். குறித்தசிறுமி வீட்டில் வளர்க்கப்படும் ஆட்டுக்கு குழை வெட்டுவதற்காக கிணற்றுக் கட்டில் ஏறிநின்று பூவரசம் குழை வெட்டியபோது அவர் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்துள்ளார் என்று முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்துள்ளார். நெல்லியடி பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-113)

## இளைஞனின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 20

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு கொழுந்துப்புலவுப் பகுதியில் தூக்கிட்ட நிலையில் இளைஞரொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

விநாயகமூர்த்தி சாரங்கன் (வயது -24) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறப்புத் தொடர்பான விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-113)



## கலந்துரையாடல்

சாவகச்சேரி, ஜன. 20

சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் மின்தகன மண்டபம் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல், நாளைமறுதினம் பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் மற்றும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினரின் ஏற்பாட்டில், புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்களின் நிதிப்பங்களிப்பில் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் ஆர்வமுள்ளவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் ஆகியோரைக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார். (ம-ரி1-9)






### இனப்பிரச்சினையை பொருளாதாரப் பிரச்சினையாகப் பார்க்கும்

# ஜனாதிபதி கோத்தாவின் கொள்கை மாறவில்லை!

மனோ சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஜன. 20**

**இனப்பிரச்சினையை, பொருளாதாரப் பிரச்சினையாகப் பார்க்கும் தனது கொள்கை மாறவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டியுள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச - என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான மனோ கணேசன்.**

ஜனாதிபதி அடுத்த மூன்று வருடங்களுக்கான தனது அரசின் கொள்கையை விளக்கி, நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றினார். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதியின் உரை நிறைவு பெற்றபின், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் சலிப்புடனும், ஏமாற்றத்துடனும் இருந்ததை அவருக்கு சமீபத்தில் அமர்ந்திருந்த போது அவதானித்தேன். அது எனக்கு மிகுந்த மனக்கவலையைத் தந்தது.

இனப்பிரச்சினையை பொருளாதாரப் பிரச்சினையாகப் பார்க்கும் ஜனாதிபதியின் போக்கு இன்னமும் மாறவில்லை என்பதை அவரது உரைமூலம் தெரிந்து கொண்டோம் என்றுள்ளது. (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டியற்ற கல்விக்கடன் தொடர்பில்

# வடக்கு இளைஞர்களிடம் விழிப்புணர்வு இல்லை

## கல்வியியலாளர் ஆதங்கம்

**வவுனியா, ஜன. 20**

**அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வட்டியற்ற கல்விக்கடன் பற்றிய விழிப்புணர்வு வடமாகாண இளைஞர்களிடம் இல்லை. தென்பகுதி மாணவர்கள் இந்தக் கடன் திட்டத்தால் பெருமளவு நன்மைகளை அடைந்துவருகின்றனர் என்று தெரிவித்துள்ளார் கல்வியியலாளரான நாசிம் செயட்.**

வவுனியா ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

க.பொ.த. உயர் தரப்பரீட்சை எழுதி பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகாத மாணவர்கள் அனைவரும் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை மேற்கொள்ள வேண்டும் என்ற நல்லெண்ணத்தில், மைத்திரி - ரணில் கூட்டாட்சிக் காலத்தில் ஆறு லட்சம் ரூபா முதல் எட்டு லட்சம் ரூபா வரை கடனாகப் பெறும் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தச் செயற்றிட்டம் எங்களுடைய வடக்கு கிழக்கு மாணவர்கள் மத்தியில் சென்றடையவில்லை என்ற விடயம் மிகவும் கவலைக்குரியது. கண்டி, கொழும்பு போன்ற பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் தான் இந்தத் திட்டத்தால் அதிக பயனை அடைந்துவருகின்றனர். வர்த்தமானியில்கூட இந்த அறிவிப்பு வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும் அதன் பயனை வடக்கு மாணவர்கள் அனுபவிக்கவில்லை. அடுத்த மாதத்துடன் இந்தக் கடன்திட்டத்துக்கான அவகாசம் முடிகின்றது. எனவே மாணவர்கள் இது தொடர்பில் பரிசீலிக்கவேண்டும் - என்றார். (ம-110)

## இளஞ்செழியனுக்கு கிடைத்தது பிணை

முல்லைத்தீவு, ஜன. 20

போலி ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டில், கடந்த 31ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பீற்றர் இளஞ்செழியனை இரண்டு லட்சம் பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் விடுவிக்க முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பீற்றர் இளஞ்செழியன் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி எஸ்.தனஞ்சயன் பிணை விண்ணப்பம் செய்திருந்தார்.

இதனடிப்படையில் பீற்றர் இளஞ்செழியனை இரண்டு லட்சம் பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் விடுவிக்க முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளதோடு வழக்கு விசாணைகள் மே மாதம் 24ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டது. (ம-19)

பாலியல் குற்றச்சாட்டு

## கைதான ஆசிரியருக்கு நிபந்தனையுடன் பிணை

முல்லைத்தீவு, ஜன. 20

முல்லைத்தீவில் மாணவிகளுக்குப் பாலியல் தொந்தரவு கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஆசிரியருக்குக் கடும் நிபந்தனையுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் ஆசிரியர், பாடசாலை மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த குற்றச்சாட்டில் முல்லைத்தீவு பொலிஸாரால் கடந்த மாதம் 24ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது குறித்த ஆசிரியருக்கு கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டது.

அத்துடன் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 9 மணிதொடக்கம் நண்பகல் 12 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-19)

## ஆமை இறைச்சியுடன் யாழில் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்புத்துறை மணியந்தோட்டம் பகுதியில் ஆமைகளுடன் இளைஞன் ஒருவரை சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் ஆமைகள் இறைச்சியாக்கப்படுகின்றன என யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருககுக் கிடைத்த தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குறித்த பகுதியை சுற்றிவளைத்தனர்.

அதன்போது நான்கு ஆமைகள் ஏற்கனவே இறைச்சியாக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இரண்டு ஆமைகள் உயிருடன் மீட்கப்பட்டன.

ஆமைகளை உடைமையில் வைத் திருந்த. இறைச்சியாக்கிய சந்தேகத்தின் அடிப்படையில் அதேபகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (ச-125)






**ஒருமாதிரி இழுத்துப்பறிச்சு மோடிக்கு அனுப்பவேண்டிய கடிதத்தை இந்தியத் தூதரிட்ட தமிழ்க் கட்சியளின்ர தலைவர்மார் சேர்ந்து ஒப்படைச்சுப் போட்டினம். ஆனால், சட்டாம்பியார் அதை ஒப்படைக்கவிடாமல் பண்ணின எல்லா இராஜதந்திரங்களும் வீணாப் போச்சுதே எண்டு மனசுக்க புலம்பினதை ஆளின்ர முகமே காட்டிக் குடுத்துக் கொண்டிருந்திச்சு.**

**வழக்கமா இப்பிடியான இராஜதந்திர சந்திப்புகளில சட்டாம்பியார்தான் முன்னுக்கு நிண்டு, எல்லாத்தையும் நடத்திறவர். ஆனால் முந்தநாள் இந்தியத்தூதரிட்ட போகேக்க, ஆள் கப்சிப். முகமெல்லாம் இருண்டுபோய், ஏதோ செத்தவீட்டுக்குப் போன மாதிரித்தான் உம்மெண்டுகொண்டு இருந்தவராம். அந்த ஆவணத்தைக் குடுக்கேக்ககூட, ஆள் நைசா அங்கால தள்ளிப்போய் நிண்டிட்டார். சம்பந்தரும், விக்கியரும் தான் முன்னுக்கு நிண்டு குடுத்தவை. அதிலயே சட்டாம்பியாருக்கு இந்த விசயம் பிடிக்கேலை எண்டு எல்லாருக்கும் விளங்கியிருக்கும்.**

**பிறகு எல்லாரோடையும் அந்த ஆவணம் பற்றி இந்தியத்தூதர் மனம் விட்டுக் கதைக்கேக்ககூட, தனக்கும் இதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை எண்டமாதிரி ஆள் பேசாமல் இருந்திருக்கிறார். எண்டாலும் இந்தியத் தூதர் விடேலை.**

**என்ன பேசாமல் இருக்கிறீங்க? எண்டு அவர் கேட்ட பிறகுதான் சட்டாம்பியார் வாயைத் திறந்தாராம். ஆனால் அப்பவும் ஆவணத்தை பற்றிக் கதைக்காமல், கோத்தாபயவின்ர கொள்கை விளக்கவுரை பற்றியும், அதை சம்பந்தர் குப்பைப் பேச்சு எண்டு பஸிலுக்கு முன்னால கெத்தா சொன்னதையும்தான் சட்டாம்பியார் இந்தியத்தூதருக்கு திரும்பச் சொல்லியிருக்கிறார்.**

**அதுக்குப்பிறகு வெளியில எல்லாரும் வந்து மீடியாக்காரரிட்ட உள்ளுக்க நடந்ததை சொல்லிக் கொண்டிருக்கேக்க, சட்டாம்பியார் மட்டும் நழுவிட்டார். எல்லாத்துக்கும் தான் மட்டும் தலைப்பாகை கட்டோணும் எண்டு நினைச்சால் எப்பிடி சனத்துக்கு நல்லது செய்வினம் எண்டு நம்பிறது...?**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களிடையே மீண்டும் தொற்று!

## சுகாதாரத் தரப்பினர் ஆலோசனை

**கொழும்பு, ஜன. 20**

**சிறுவர்களிடையே கொரோனாத் தொற்று அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு சுகாதாரத் தரப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.**

கொழும்பு, சீமாட்டி லேடி ரிஜ்வே மருத்துவமனையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 31 சிறுவர்கள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த மாதத்தின் ஆரம்பத்தில் 4 சிறுவர்கள் மாத்திரமே சிகிச்சை பெற்றிருந்தனர். எனினும் அந்த எண்ணிக்கை தற்போது 31 ஆக அதிகரித்துள்ளது.

இது போலவே, நாட்டின் பல பாகங்களிலும் உள்ள கொரோனாத் தடுப்பு மையங்களிலும் பல சிறுவர்கள் சிகிச்சைபெற்று வருகின்றனர். எனவே, சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப்பும்போதும், வேறு இடங்களுக்கு அனுப்பும் போதும் பெற்றோர் உரிய சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டும் என்று சுகாதாரத் தரப்பினர் கேட்டுள்ளனர். (ம-4-இ)

## சுவாசிப்பதில் சிரமமெனில் உடனே பரிசோதியுங்கள்

### மருத்துவர்கள் ஆலோசனை



கொழும்பு, ஜன. 20

கடந்த வார இறுதியில் பயணங்கள் மற்றும் ஒன்றுகூடல்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, காய்ச்சல் அல்லது சுவாசிப்பதில் பிரச்சினைகள் இருப்பின் உடனடியாக மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டும் என்று மருத்துவர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்றாளர்களுக்கு ஒட்சிசன் தேவையில் சிறிதளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலை சுகாதார அமைப்பில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தாது.

எனினும் அது மேலும் வளர்ச்சியடைவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இதற்கு மக்களின் ஒத்துழைப்பும் அவசியம் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

## சிறைக் கைதிகளின் விடுதலை; ஐரோப்பிய ஒன்றியம் கரிசனை

கொழும்பு, ஜன. 20

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள சிறைக் கைதிகளுடைய விடுதலை தொடர்பில், ஐரோப்பிய ஒன்றியம் கரிசனை செலுத்தியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் செய்பியைச் சந்தித்துக் கலந்துரையாடிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத தடைச்சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டு, சிறையில் இருக்கின்ற தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் பலர், சட்ட நடவடிக்கை எடுப்பதற்குக் கூட பொருளாதார வசதிகள் இன்றி மிகவும் சிரமப்படுகின்றனர்.

அவர்களது விடுதலை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் அக்கறை செலுத்தினார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிப்பங்களிப்பில், நீதிமன்றங்களின் திறனை அதிகரிக்கும் மூன்று வருடங்கள் செயற்றிட்டத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் உறுதியளித்தார்-என்றார். (ம-4-இ)



## கொரோனாவுடன் வாழப்பழகுங்கள் தடுப்பூசிகளே பாதுகாப்புத் தரும்!

### அமெரிக்க மருத்துவர் ஆலோசனை

கொழும்பு, ஜன. 20

கொரோனாவுடன் வாழ மக்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அதிலிருந்து உயிரைப் பாதுகாக்க வேண்டுமெனில், அதற்கேற்ற தடுப்பூசிகளை உரிய காலத்தில் பெற்றுக்கொள்வதே தற்போதுள்ள ஒரே தீர்வு என்று அமெரிக்காவின் மேரிலாண்ட் பல்கலைக்கழகத்தின் தொற்றுநோயியல் பிரிவின் தலைவர் மருத்துவர் பஹீம் யூனுஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனாவுடன் வாழ நாம் கற்றுக்கொள்ளவேண்டும். இதற்கு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆபத்தான சூழலைத் தவிர்க்க செயலூக்கி மருந்தைச் செலுத்திக் கொள்ளவேண்டும்.

இசைக் கச்சேரிக்கோ அல்லது மதுபான விடுதிக்கோ செல்வது இன்றியமையாத ஒன்றல்ல. எம்முடைய பெற்றோரைக் கவனிப்பது என்பது முக்கியத்துவம் வாய்ந்தது.

நல்ல தரமுள்ள முகக்கவசங்களை அணிவது மற்றும் முழு அளவிலான தடுப்பூசியைச் செலுத்திக் கொள்வது ஆகிய வற்றால் கொரோனாவுடன்நாம் வாழமுடியும். அதுவே சாவையும், மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதையும் தடுக்கும்- என்றார். (ம-4-இ)

## துறைமுக நகரை 89,500பேர் பார்வை

கொழும்பு, ஜன. 20

கொழும்பு துறைமுக நகரை கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 89 ஆயிரத்து 500க்கும் அதிகமானோர் பார்வையிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவுக்கும் - இலங்கைக்கும் இடையிலான 65ஆவது இராஜதந்திர ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், கடந்த 6ஆம் திகதி கொழும்பு துறைமுக நகரில் 500 மீற்றர் பொது நடைபாதை திறக்கப்பட்டது. (ம-4-இ)



## நாடாளுமன்றில் அன்டிஜென் சோதனை நால்வருக்குத் தொற்று




கொழும்பு, ஜன. 20

நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையின்போது நால்வருக்குக்கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற ஊழியர், ஊடகவியலாளர், நடனக் குழுவின் கலைஞர் உள்ளடங்கலாக நால்வருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான நிலையில், நாடாளுமன்றத்துக்கு வருகை தந்தவர்கள் அன்டிஜென் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன்போதே நால்வருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம-22)

## வெலிக்கடை சிறைப்படுகொலைத் தீர்ப்பு; மனித உரிமை அமைப்புக்கள் அதிருப்தி!

கொழும்பு, ஜன. 20

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலையுடன் தொடர்புடைய வழக்கின் தீர்ப்புத் தொடர்பில், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

சாவுத்தண்டனைக்கு எதிரான ஆசிய வலையமைப்பு, உச்சபட்ச தண்டனை குறித்த நீதிச்செயற்திட்டம், மனித உரிமைகளுக்கான சர்வதேச பேரவை, மொனாஷ் பல்கலைக்கழகத்தின் எலியோஸ் நீதி மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆகிய நிறுவனங்களின் கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வெலிக்கடை சிறைச்சாலை படுகொலைச் சம்பவத்தைப் பொறுத்த மட்டில் சிரேஷ்ட அதிகாரிகள் சிலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு, விசாரணை ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், சிறைச்சாலைகள் முன்னாள் அத்தியட்சகர் லமாஹேவகே எமில் ரஞ்சன் மாத்திரமே தண்டிக்கப்பட்டுள்ளார். ஒரேயொரு அதிகாரியை மாத்திரம் பொறுப்புக்கூறச் செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், உயிர் பிழைத்தவர்களுக்கும் நீதி கிடைக்க பொறுப்பானவர்களை பொறுப்புக்கூற வைப்பது ஒரு முக்கியமான படியாகும். அதேநேரம் சாவுத் தண்டனைகளை விதிப்பதால் பொறுப்புக்கூற வைக்கமுடியாது. இலங்கையில் இருந்து சாவுத் தண்டனை நீக்கப்படவேண்டும்-என்றுள்ளது. (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொங்கிறீற்றாக மாறும் வீதிகள்

சாவகச்சேரி, ஜன. 20

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சில வீதிகள், கொங்கிறீற் வீதிகளாக மாற்றப்படவுள்ளன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அறிவித்துள்ளனர். இதற்கமைய, நுணாவில் மேற்கு பிரிவில் சேகண்டி வாய்க்கால் 2ஆம் ஒழுங்கை, கல்வயல் பிரிவில் மானாவளை முதலாம் ஒழுங்கை, சாவகச்சேரி வடக்குப் பிரிவில் பெரிய அரசடி வீதி குறுக்குத் தெரு, சாவகச்சேரி நகரப் பகுதியில் ஹென்ஸ்மன் 1ஆம், 2ஆம், 3ஆம் ஒழுங்கைகள் ஆகிய வீதிகளே கொங்கிறீற் வீதிகளாக மாற்றப்படவுள்ளன. (ம-ரி1-9)



# முகமாலையில் மனித எச்சம்!

## அகழ்வை முன்னெடுக்கவும் திட்டம்

கிளிநொச்சி, ஜன. 20

**முகமாலைப் பகுதியில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மனித எச்சமொன்று மீட்கப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்ட, பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வு நடவடிக்கையின்போதே இந்த மனித எச்சம் மீட்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் பளை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அவர்கள்மூலம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவானுக்கு தகவல் வழங்கப்பட்டது. இதையடுத்து குறித்த பகுதிக்கு நேரில் சென்ற நீதிவான் நிலைமைகளை ஆராய்ந்தார். அந்தப் பகுதியில் மீட்புப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளன. (ம-214)



# முன்னெச்சரிக்கைப் பயிற்சிக் கருத்தமர்வு

'சமூக மோதலுக்கான முன்னெச்சரிக்கை மற்றும் தயார் நிலை' தொடர்பான ஒருநாள் பயிற்சிக் கருத்தமர்வு மன்னாரில் அண்மையில் இடம்பெற்றது. இலங்கை சமாதானப் பேரவை மற்றும் மன்னார் பிரதேச சர்வமதக் குழுக்கள் ஆகியவற்றின் அனுசரணையுடன் இக் கருத்தமர்வு இடம்பெற்றது. (ம-4-60)

# வழிகாட்டல் வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஜன. 20

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தால் நடத்தப்படவுள்ள 2022ஆம் ஆண்டுக்கான சைவப் புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இந்த வழிகாட்டல் வகுப்புக்கள் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை இலக்கணம், சாத்திரம், இலக்கியம், வரலாறு, உரைநடை ஆகிய ஐந்து பாடங்களும் சைவப்புலவர் மற்றும் இளஞ் சைவப்புலவர்களுக்கு தனித்தனிப்பிரிவுகளாக இடம்பெறவுள்ளன.

பரீட்சைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளன.

பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் இந்த வழிகாட்டல் வகுப்புக்களில் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ச)

# பெறுபேறுகள் வெளியாகின

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்பட்ட 2020ஆம் கல்வியாண்டுக்கான இளஞ்சைவப் புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன என அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

சைவப்புலவர் பரீட்சையில் கலாநிதி இளையதம்பி ஜெயந்திரன், திருமதி இராதா ஞானரெத்தினம், திருமதி பத்மலோஷினி ஸ்ரீராமன், வேளப்போடி மகேசரெத்தினம் ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

இளம்சைவப்புலவர் பரீட்சையில் குமாரசாமிசர்மா சுவாமிநாதசர்மா, செல்வகுமார் கிருஸ்ணகுமார், கியோமிதா தவநேசன், கஜிதா சந்திரன், சிவநந்தினி யோகநாதன், கிருபைரத்தினம் சர்வேஸ்வரன், மேனுசா கிருபராசா, ஜிதர்ஜினி கிருஸ்ணகுமார், கஸ்தூரி வடிவேல், கிருஸ்ணன் வரதராசன், அஜித்தா உதயகுமார், தர்மிதா சேனாதிபதி, மிதுஷ்னா கமலநாதன், நித்தியானந்தன் பாபுதரன் ஆகியோர் சித்தியடைந்துள்ளனர். (ம-ச)

# வவு. ஓமந்தையில் கைக்குண்டு மீட்பு

வவுனியா, ஓமந்தை - நாவற்குளம் பகுதியில் கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

ஓமந்தை - நாவற்குளம் பகுதியிலுள்ள தனியார் காணியைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டபோதே குறித்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஓமந்தை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-110)



# மன்னாரில் வயற்காணி இடாப்பு மீள்திருத்தம் தற்போது ஆரம்பம்

மன்னார், ஜன. 20

மன்னார் மாவட்டத்தில் 2022ஆம் ஆண்டுக்கான வயற்காணி இடாப்பு மீள்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மன்னார் மாவட்டத்திலுள்ள 13 கமநல சேவை நிலையங்களில், விவசாயிகள் தங்கள் வயற்காணிப் பதிவேடுகளைப் பார்வையிட்டு பதிவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், வயற்காணிப் பதிவேட்டில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள கமக்காரர்கள் தங்கள் வயற்காணி அமைந்துள்ள கமநல சேவை நிலையங்களில் உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, பூர்த்தி செய்து தேவையான ஆவணங்களுடன் கமநல சேவை நிலையங்களில் சமர்ப்பித்து தங்கள் வயற்காணி பதிவைத் திருத்திக் கொள்ள முடியும்.

வயற்காணி இடாப்பு மீள்திருத்தம் தொடர்பான மேலதிக விவரங்களை, தங்கள் பகுதிக்குப் பொறுப்பான விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளரை அல்லது கமநல சேவை நிலையத்தைத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், 2022ஆம் ஆண்டுக்கான வயற்காணி இடாப்பு மீள்திருத்த வேலைகள் ஜனவரி மாதத்துக்குள் முடிவுறுத்தப்படவுள்ளதால், அனைத்து கமக்காரர்களையும் கொரோனாத் தாக்கத்தைக் கருத்திற்கொண்டு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-ரி1-60)





# கண்காட்சியும் கௌரவிப்பும்

காரைநகர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட பனை சார் உற்பத்தி பயிற்சிநெறியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் பனைசார் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் நேற்று காரைநகர் பிரதேச சபையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றன. காரைநகர் பிரதேச சபையின் செயலாளரான கி.விஜயேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச சபையின் தவிசாளர் ம.அப்புத்துரை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இதன் போது பனை சார் உற்பத்திகளை மேற்கொண்டு முதல் மூன்று இடங்களைப்பெற்ற மூவர் கௌரவிக்கப்பட்டனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஊடுபயிர்கள்தானா…!

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்குப் பொலிஸ்மா அதிபர் பதவியை வழங்குங்கள் என்று கிண்டலடித்துள்ளார், 'ஒரே நாடு: ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் தலைவரான கலகொட அத்தே ஞானசார தேரர்.

பொரளை தேவாலயத்தில் அண்மையில் கைக்குண்டொன்று மீட்கப்பட்டது. இந்த விவகாரம் நாடெங்கும் பூதாகரமாகியிருந்தது. உயிர்த்த ஞாயிறுத் தினத்தன்று இலங்கையின் தேவாலயங்களில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு நீதியென்பது இன்னமும் எட்டாக்கனியாக இருக்கையில், பிறிதொரு தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்டமையானது இயல்பான பதற்றத்தை ஏற்படுத்தவே செய்யும். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்கு நீதியைத் தேடித்தேடி சலித்து களைத்துப்போன பேராயர் தன் சமூகம் ஏன் இலக்கு வைக்கப்படுகின்றது என்ற கேள்வியைக் கேட்கவே செய்வார். அதிருப்தியை வெளிப்படுத்தவே செய்வார். அதுவே யாதார்த்தம். அவ்வாறு பொலிஸ்மா அதிபர் மட்டில் பேராயர் வெளிப்படுத்திய அதிருப்தியை அடுத்தே, 'கர்தினால் பொலிஸ்மா அதிபரை விமர்சனம் செய்திருக்கின்றார். அப்படியானால் பொலிஸ்மா அதிபர் பதவியை கர்தினாலிடம் கொடுத்துவிடுங்கள்' என்று கேலியாகப் பதிலிறுத்துள்ளார் ஞானசார தேரர்.

பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்டமை சாதாரண சம்பவம் அல்ல. இந்தநாட்டில் விசாரணை நடத்தப்படும் முறையொன்று உள்ளது என்று தனது 'கனவான் தன்மையை', 'சட்டத்தை மதிக்கும் மகத்தான மாண்பை' வெளிப்படுத்தவும் ஞானசார தேரர் தவறவில்லை.

ஆனால், அவரிடம் ஒரு கேள்வியுள்ளது. நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தை ஆக்கிரமித்து, அங்கு விகாரைஅமைத்திருந்த பௌத்தபிக்குபுற்றுநோயால் பாதிக்கப்பட்டு, உயிரிழந்தபோது, அவரின் சடலத்தை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் எரியூட்ட எடுத்த முயற்சிகளுக்கு நீதிமன்றம் முட்டுக்கட்டை போட்டது. எனினும் நீதிமன்றத் தீர்ப்பை மீறி கலகொடஅத்தே ஞானசார தேரர் தலைமையிலான குழுவினரால் சடலம் எரியூட்டப்பட்டது. இது மட்டுமல்ல, பிறிதொரு நீதிமன்ற அவமதிப்புக்காக சிறையில் அடைக்கப்பட்டவர்தான் ஞனசார தேரர். இதன்போதெல்லாம் 'விசாரணை நடத்தப்படும் முறையென்ற ஒன்று இந்த நாட்டில் உள்ளது' என்பது ஞானசார தேரருக்கு ஏன் தெரியவில்லை.


இலங்கை ஒரு பௌத்த – சிங்கள நாடு. இந்த நாட்டில் தமிழர்கள், முஸ்லிம்கள் இருந்தாலும், இந்த நாடு பௌத்த – சிங்கள நாடுதான். ஒரு தென்னந்தோப்பில் வாழை, மிளகாய் என ஊடுபயிர்கள் பயிரிடப்பட்டால் அந்தத் தோட்டம் வாழைத்தோட்டம் என்றோ அல்லது மிளகாய்த் தோட்டம் என்றோ அழைக்கப்படாது. அது என்றும் தென்னந்தோட்டம் தான். அப்படித்தான் இதுவும் என்றுரைத்தவர்தான் ஞானசார தேரர்.

அவரின் மேற்குறித்த கூற்றுக்கும், கர்தினாலுக்கு முன்வைத்த கருத்துக்கும் மிக நெருக்கமான தொடர்புள்ளது. 'இந்த நாடு பௌத்த – சிங்களநாடு. பௌத்த, சிங்களவர்கள் சார் பிரச்சினைகள்தான் முதன்மையானவை' என்பதுதான் அந்த 'வெளிப்படுத்தப்படாத' நிலைப்பாடு. இங்குள்ள சிறுபான்மை மக்கள் கிள்ளுக்கீரைகள் என்ற எண்ணவோட்டம் என்று விலகிச்செல்லுமோ அன்றுதான் இந்தத் தீவுக்குச் சுபீட்சம் கிட்டும். ஆனால், கண்ணுக்கெட்டிய தூரம்வரையில் அதற்கான வாய்ப்புகள் இல்லை. இம்மியும் இல்லை.

நாளொரு நல்வார்த்தை

"நீ ஒருவனிடத்தில் உதவியாகப் பெறக்கூடியதை எக்காரணத்தை முன்னிட்டும் உரிமையாகக் கேட்காதே!"

-சோக்கிரட்டீஸ்



# இலங்கையின் இறைமையில் எவரும் தலையிட முடியாது

## அமைச்சர் கம்மன்பில எகத்தாளம்



**கொழும்பு, ஜன. 20**

**இந்தியாவின் ஒரு மாநிலம், இலங்கை இல்லை. இது ஒரு தனிநாடாகும். அதனால் தமிழ்க்கட்சிகள் அனுப்பிய கடிதத்தைப்பற்றி அலட்டிக்கொள்ளத்தேவையில்லை என்று அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழ்க் கட்சிகள் சில இணைந்து தயாரித்த கடிதம், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது. இதுதொடர்பில் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கேள்விகள் எழுப்பப்பட்டன. அந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே கம்மன்பில இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

எம்முடன் பேசாமல் எங்கு சென்று பேசினாலும் அதில் பயன் இல்லை. இந்தியாவின் ஒரு மாநிலம் இலங்கை இல்லை. இது தனிநாடாகும். ஆகையால், அந்தக் கடிதத்தைப் பற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்றார். (ம-4-இ)

# சேதனப் பசளை உற்பத்திக்காக சிராட்டிக்குளத்தில் 49 ஏக். காணி

முல்லைத்தீவு, ஜன. 20

முல்லைத்தீவில் சேதனைப் பசளை உற்பத்திக்காக சிராட்டிக்குளம்பகுதியில் 49 ஏக்கர் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாந்தைகிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் மரியாம்பிள்ளை இக்னேசியஸ் என்பவரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக பிரதேசமட்ட காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டத்தில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், கிராம மட்ட பொதுஅமைப்புக்களின் அனுமதியுடன் பிரதேச செயலகத்தால் குறித்த கோரிக்கை ஏற்கப்பட்டு, மாவட்டச் செயலகத்தின் அனுமதியுடன் அடுத்த சில வாரங்களுக்குள் குறித்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது

இதேவேளை விண்ணப்பதாரியான மரியாம்பிள்ளை இக்னேசியஸிடம், குறித்த செயற்றிட்டம் தொடர்பில் வினவியபோது அவர் தெரிவித்ததாவது:-

சேதனப் பசளை உற்பத்திக்காக நான் எமது கிராமத்தை தெரிவு செய்ததற்கான காரணம், எமது பிரதேசங்களில் தொழில் வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பினை வழங்கும் ஒரு செயற்றிட்டமாக நான் இந்தச் செயற்றிட்டத்தை மேற்கொள்கின்றேன். இதனைவிட நச்சுத் தன்மையற்ற உரப் பாவனையின் அவசியத்தை உணர்ந்து எதிர்காலத்தில் நச்சுப் பாவனையற்ற விவசாய விளைச்சல்களை எமது கிராமங்களில் செயற்படுத்துவதுமே இந்த செயற்றிட்டத்தின் நோக்கம் - என்றார். (ம-19)

நாளை 21.01.2022 வெள்ளிக்கிழமை

தை 08

சுபநேரம் : 06.35 - 08.05

ராகுகாலம் : 11.05 - 12.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழக ஊர்திக்கு அனுமதி மறுப்பு



**புதுடில்லி, ஜன.20**

**நாட்டின் குடியரசு தின அணிவகுப்பில் தமிழக அரசின் அலங்கார ஊர்திக்கு மத்திய அரசு அனுமதி மறுத்துள்ளது.**

தலைநகர் புதுடில்லியில் குடியரசு தின விழாவை முன்னிட்டு எதிர்வரும் 26ஆம் திகதி பிரம்மாண்ட அணிவகுப்புகள் நடைபெறவுள்ளன. இதில் அனைத்து மாநிலங்களின் சார்பில் கலை, பண்பாட்டு அலங்கார ஊர்திகள் இடம்பெறுவது வழக்கம். இந்த நிலையில் குடியரசு தின நிகழ்வில் தமிழக ஊர்தி பங்கேற்க அனுமதி இல்லை என மத்திய அரசு அறிவித்துள்ளது.

தமிழக அரசு சார்பில் வேலு நாச்சியார், வ.உ.சி உள்ளிட்ட விடுதலைப் போராட்ட வீரர்களைச் சித்திரிக்கும் வகையில் அலங்கார ஊர்திக்கான கருத்துரு வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தமிழகத்தின் சார்பில் வழங்கப்பட்டிருந்த அலங்கார ஊர்திக்கான கருத்துருவை நிபுணர் குழு நிராகரித்துவிட்டது எனக் கூறப்படுகிறது.

இதற்கு, கொரோனாப் பெருந்தொற்று உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பங்கேற்கும் மாநிலங்களின் எண்ணிக்கை 12ஆக குறைக்கப்பட்டுள்ளது என மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது. (ச)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முதலீடு சம்பந்தமான புதிய முயற்சிகளில் இன்று ஈடுபடலாம். தந்தை வழி உறவினர்களால் நன்மைகள் ஏற்படும்.

**இடபம்:** குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு நன்மை நிகழும். பெரியவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். வீண் பயம் தீரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மிதுனம்:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். மகிழ்ச்சியான நாள். துணிச்சலுடன் செயற்படுவீர்கள்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சகபணியாளர்களிடம் இணக்கமாக நடந்து கொண்டு நன்மை காண்பீர்கள். வெளியூர், வெளிநாட்டில் உள்ள நண்பர்கள் உங்களுக்கு உதவுவர்.

**சிம்மம்:** குடும்பத்தில் ஒருவருக்கு திருமணம் நிச்சயமாகும். பணவரவு உண்டு. கணவன் மனைவி இடையே ஏற்பட்டிருந்த வருத்தங்கள் அகலும். வாழ்க்கைத்துணையால் நன்மை வரும்.

**கன்னி:** இன்று நிதி பற்றிய முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். சகோதர வகையில் எதிர்பார்த்த விஷயம் தாமதமாகலாம். குடும்பத்தினர் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கித் தருவீர்கள்.

**துலாம்:** நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கவலைகள் தீரும். வாழ்க்கைத்துணையின் செயலால் மகிழ்ச்சி உண்டாகும். பணியில் இருந்த சங்கடம் தீரும்.

**விருச்சிகம்:** வியாபாரிகளுக்கு பணப்புழக்கம் முன்பைவிட சற்றே அதிகரிக்கும். உங்களது முனைப்பான முயற்சியால் புதிய விஷயம் ஒன்று சாதகமாக முடியும். எதிர்பார்த்து காத்திருந்த செய்தி வரும்.

**தனுசு:** பேச்சிலும் செயலிலும் கவனமாக இருந்தால் பிரச்சினை வராது. கணவன் - மனைவி இடையே புரிதல் அதிகரிக்கும். எதிர்பாராத செலவு வரக்கூடும். வீண் பேச்சைத் தவிர்க்கவும்.

**மகரம்:** உங்களது பேச்சில் நேர்மறை எண்ணம் பிரதிபலிக்கும். கடன் வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது. பயம் நீங்கும். பணி குறித்த ஒன்று வந்து உங்களை மகிழ்விக்கும்.

**கும்பம்:** சோம்பலைத் தவிர்ப்பது நல்லது. பழி வராமல் காக்கவும். அதிர்ஷ்டம் வரும். குழந்தைகளின் வாழ்வில் மகிழ்ச்சி உண்டாகும். லாபம் கூடும். உடல்நலத்தில் கவனம் தேவை.

**மீனம்:** திடீர் சுபச்செலவுகளால் உங்களின் கையிருப்பு குறையக்கூடும். தாயின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். வாகனம் வாங்கும் யோகம் உண்டு. புதிய விடயம் கற்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் நோய்கள் பலவற்றுக்கும் பிரதான காரணமாக அமைவது, முறையற்ற ஆகார ஜீரண செயன்முறையே...

உணவு ஜீரணச் செயன்முறையை கிரமமாக்குவதன் மூலம் உங்கள் சுகவாழ்வு பாதுகாக்கப்படும்.

தினமும் ஸ்வஸ்த திரிபலா பாவிப்பதன் மூலம் ஆகார ஜீரண செயன்முறை சீராகும்.

தினசரி பாவனை மூலம்

- உணவு ஜீரண செயற்பாடு கிரமமாகவும் முறையாகவும் நடைபெற உதவும்.
- வயிறு ஊதல் மற்றும் மலக்கட்டு நீங்கி மல வெளியேற்றம் கிரமமடையும்.
- ஈரலை பாதுகாத்து அதன் தொழிற்பாட்டை மேம்படுத்தும்.
- கண்பார்வையை மேம்படுத்தும்.
- இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும்.
- சருமத்தின் மினுமினுப்பை அதிகரிக்கும்.
- வயதுக்கு முன் மூப்படைதலை தடுத்து, இளமையை பேண உதவும்.
- அதி உடற்பருமன், கொலஸ்டரோல், பெருவயிறு ஆகிய காரணங்களால் ஏற்படும் உபத்திரவங்களை கட்டுப்படுத்த உதவும்.
- விஷ பதார்த்தங்களையும் கழிவுகளையும் உடலிலிருந்து வெளியேற்ற உதவும்.

ஸ்வஸ்த திரிபலா பாவனை உபதேசம்

- சுகநலத்தையும் இளமையையும் பேணுதலுக்கு தினமும் 1-2 வில்லைகள் வீதம், நாளொன்றுக்கு இரு தடவைகள்.
- அதிக அமிலத்தன்மை, வயிற்று எரிவு, ஜீரணக்குறைவு மற்றும் மன அழுத்தத்தால் ஏற்படும் நிலைமைகளுக்கு நாளொன்றுக்கு இருதடவைகள் இரு(2) வில்லைகள் வீதம் எடுத்துக்கொள்ளவும்.
- மலக்கட்டு, மலம் வெளியேறுவதில் கிரமமற்ற நிலைகளில் 2-4 வில்லைவரை இரவு உணவுக்கு பின்பு பயன்படுத்தவும்.

"வேலைப்பளு நிறைந்த உங்களுடைய ஆரோக்கியமான நீண்ட ஆயுளுக்கு...."

100% இயற்கையானது

லிங்க் நெச்சுரல்

ஸ்வஸ்த

திரிபலா






ரூ. 165/= இலிருந்து

கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் போன்ற பசும் மூலிகைகளாலான ஆயுர்வேத தயாரிப்பு.

Herbs proven in Ayurveda practice

100% NATURAL ACTIVE INGREDIENTS

CLINICALLY PROVEN to promote CHOLESTEROL REDUCTION

முன்னணி மருந்தகங்கள், ஆயுர்வேத கடைகள் மற்றும் சுப்பர் மாக்கட்டுக்களில் பெற்றுக்கொள்ளலாம்.

லிங்க் நெச்சுரல் புரொடக்ஸ் தனியார் நிறுவனம் ... info@linknaturalproducts.com இணையம்: www.linknaturalproducts.com





அறுவடை செய்து சொகுசாக இருங்கள்




Browns WORLD SUMO

- குதிரைவலு 88 கொண்ட அதி சக்தி வாய்ந்த டேர்போ என்ஜின் காரணமாக குறைந்த எரிபொருள் பயன்பாடு, அதிக வினைத்திறன்
- நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கியர் தொகுதி காரணமாக வேகமான அறுவடை
- விரிவான டிரக் தொகுதி காரணமாக ஆழமான சேற்று வயல்களிலும் அறுவடை செய்யக்கூடிய திறன்
- அதிக கொள்ளளவு கொண்ட தானிய தொட்டி மற்றும் விரயமின்றி அறுவடையை பெற்றுக்கொள்ளக் கூடிய திறன்

0761 831 343 - சிந்துஜன் | 0772 842 433 - நிஷாகரன் | 0773 457 988 - துஷான்

Browns Agriculture


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்

# தனிநபர் ஒருவருக்கு ரூபா 8 இலட்சம் கடன்



**கொழும்பு, ஜன. 20**

**தற்போது இலங்கையில் தனிநபர் ஒருவரின் கடன் 8 லட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளது என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**

மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நாட்டின் அனைத்துத் துறைகளும் சவால்களை எதிர்நோக்கி வருகின்றன. நாட்டின் வெளிநாட்டுக் கடன் ரூ.17.2 ட்ரில்லியனாக உள்ளது. 1970ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பதவியேற்ற போது, அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 9 ரூபாவாகக் காணப்பட்டது. 1977ஆம் ஆண்டளவில் அதன் பெறுமதி 7 ரூபாவாகக் குறைவடைந்தது.

1977ஆம் ஆண்டு முதல் அனைத்து அரசாங்கங்களாலும் வெளிநாட்டுக் கடனைக் குறைக்க முடியவில்லை. அமெரிக்க டொலரொன்றின் மதிப்பு ரூ.200 முதல் 240 வரை உள்ளது. நாட்டின் டொலர் கையிருப்பு வேகமாகக் குறைந்துள்ளது. இந்த நிலை எதிர்காலத்திலும் தொடரலாம்.

இலங்கை ரூபாவின் தொடர்ச்சியான வீழ்ச்சி மற்றும் டொலரின் விலை அதிகரிப்பு என்பனவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதை தற்போதைய நிர்வாகம் ஏற்றுக்கொள்ளவேண்டும் - என்றார். (ம-4-இ)

## மின்சார உற்பத்தி இயந்திரம் நிறுத்தம்

கொழும்பு, ஜன. 20

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, களனி திஸ்ஸ அனல் மின்நிலையத்தில் மின்உற்பத்தி செய்யும் இயந்திரம் ஒன்று தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தேசிய மின்கட்டமைப்புக்கு 150 மெகாவாட்ஸ் மின்சாரத்தை வழங்கும் இயந்திரம் ஒன்றே இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளது. எனினும் இதனால் மின்சாரம் தடைப்படாது என்றும் மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்படுமா என்பது தொடர்பில் இன்னும் தீர்மானம் எட்டப்படவில்லை என்றும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (ம-4-இ)

## அபுதாபி தாக்குதல்: இலங்கை கண்டனம்

கொழும்பு, ஜன. 20

ஐக்கிய அரபு அமீரகத்தில் பொதுமக்கள்மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்கு இலங்கை அரசு வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம். உலகளாவிய சமாதானம் மற்றும் பாதுகாப்புக்கு தீங்கு விளைவிக்கும் பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு எதிராக, தொடர்ந்தும் விழிப்புடன் இருக்க வேண்டிய தன் அவசியத்தை இலங்கை மீண்டும் வலியுறுத்துகின்றது என்றுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகரான அபுதாபியிலுள்ள புதிய சர்வதேச விமான நிலையத்தில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டுள்ளதுடன், ஆறு பேர் காயமடைந்திருந்தனர். இதற்கு உலகின் பல நாடுகளில் இருந்தும் கண்டனங்கள் குவிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4-இ)

### பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் ஒப்பந்தங்கள் மேற்கொள்வது தொடர்பான தெளிவூட்டல் பயிற்சிப்பட்டறை, யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்தும் இப்பயிற்சிப்பட்டறையில், சபைகளின் செயலாளர் மற்றும் விடய உத்தியோகத்தர் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-ரி1-9)



# எரிபொருள் தாங்கிய 2 கப்பல்கள் வருகை

கொழும்பு, ஜன. 20

37 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிபொருளைத் தாங்கிய, இரண்டு கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன என்று அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பல்களில் இருந்து எரிபொருள் இறக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் மின் உற்பத்திக்காக இலங்கை மின்சார சபைக்கு 10 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம - 4-இ)

## சப்புகஸ்கந்தவிலும் மின் உற்பத்தி நிறுத்தம்

கொழும்பு, ஜன. 20

எரிபொருள் நெருக்கடியால், சப்புகஸ்கந்த மின் உற்பத்தி நிலையத்திலும் மின்சார உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஊடாக 900 மெற்றிக் தொன் எரிபொருளை இலங்கை மின்சாரசபைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, 37 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிபொருளைத் தாங்கிய, இரண்டு கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4-இ)

## விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி, ஜன. 20

வடக்கு மாகாண அரச திணைக்களங்களில் கடமையாற்றும் சாரதிகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் சேவை தரம் I,II,III ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் நடத்தப்படும் வினைத்திறன்காண் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை, எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவின் பணியகத்துக்கு அனுப்பிவைக்குமாறு செயலர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (ம-ரி1-9)

# பரீட்சை நிலையங்களாக மாறும் மருத்துவமனைகள்

கொழும்பு, ஜன. 20

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக, ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள மருத்துவமனைகளில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றால் க.பொ.த. உயர்தரப் பரீட்சை நீண்டகால தாமதத்தின் பின்னர் நடத்தப்படுவதால் இந்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிவுசெய்யப்பட்ட மருத்துவமனைகளில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். மருத்துவமனைகளும் பரீட்சை நிலையமாகச் செயற்படும் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ம-4-இ)

### நுழைவிசைவு இல்லாத நைஜீரியர்கள் கைது

நுழைவிசைவு இன்றி, இலங்கையில் தங்கியிருந்த நைஜீரியப் பிரஜைகள் இருவர் மஹரகம நாவின்னப் பகுதியில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இருவரும், மேலதிக விசாரணைகளுக்காக மஹரகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மஹரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-4-இ)

## துறைமுக நகர ஆணைக்குழுவின் முன்னேற்ற அறிக்கை வெளியீடு

கொழும்பு, ஜன. 20

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு, 6 மாதங்களில் மேற்கொண்ட முன்னேற்றங்கள் தொடர்பான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகரம், தென்கிழக்கு ஆசியாவில் விசேட மான கலப்பு அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. இந்தத் திட்டம் பசுமையான மற்றும் தொலைநோக்குடனான நகரம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கான முறைமையைக் கொண்டுள்ளது என்று அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை, திட்டமிட்ட முறையில் இந்த நகரம் உருவானதன் பின்னர், இலங்கையர்கள் கல்வி, பொருளாதாரம், கலாசாரம் உட்பட சகல சேவைகளையும் குறைந்த செலவுடன் பெறமுடியும் என்று பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.(ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு எல்லைக்குள் 2,746 பேரில் சந்தேகம்!



**கொழும்பு, ஜன. 20**

**கொழும்பு நகர எல்லைக்குள் சந்தேகத்துக்கிடமாக 2 ஆயிரத்து 746 தற்காலிக குடியிருப்பாளர்கள் தங்கியுள்ளனர் என்பது விசேட நடவடிக்கைகளில் தெரியவந்துள்ளது என்று மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பிலுள்ள வீடுகள், வணிக வளாகங்கள், நிறுவனங்கள், அரச அல்லது தனியார் வளாகங்கள், கட்டுமான வேலைத்தளங்கள் போன்றவற்றில் வசிக்கும் அனைத்து தற்காலிக குடியிருப்பாளர்களின் தகவல்களைச் சேகரிப்பதற்காக, மேல் மாகாண சமூகப் பொலிஸ் பிரிவு மூன்று நாள்கள் விசேட நடவடிக்கையை மேற்கொண்டது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்தை இல்லாதொழிக்கும் நோக்கத்துடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது மேல்மாகாணத்துக்கு வெளியில் இருந்து தற்போது கொழும்பு மாநகரில் வசிக்கும் ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 126 தற்காலிக குடியிருப்பாளர்களின் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

2ஆயிரத்து746 குடியிருப்பாளர்கள் துல்லியமான தகவல்களை வழங்கவில்லை. அதற்கமைவாக அவர்களின் அடையாளங்களை அந்தந்த பிரதேச பொலிஸ் நிலையங்களிலுள்ள அதிகாரிகள் மீண்டும் சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் - என்றார். (ம-4-இ)



## பவளக்கால் நடும் விழா

வவுனியா, ஜன.20

வவுனியா குடியிருப்பு, ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தின் சித்திரத்தேருக்கான பவளக்கால் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

சுபநேரமான முற்பகல் 11.05 மணிக்கு விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து, பவளக்கால் நடும் நிகழ்வு இடம்பெற்றது. ஆலயத்துக்கான சித்திரத் தேரை காமதேனு சிற்பாலய குழுவினர் நிர்மாணித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-110)

## ஜனாதிபதியின் செயலாளராக காமினி செனரத் கடமையேற்பு

கொழும்பு, ஜன. 20

வெற்றிடமாக இருந்த ஜனாதிபதியின் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட காமினி செனரத், தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்.

ஜனாதிபதியின் செயலாளராக பதவி வகித்த, கலாநிதி பி.பீ.ஜயசுந்தர தனது பதவியை இராஜினாமா செய்ததை அடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்துக்கே காமினி செனரத் நியமிக்கப்பட்டுள்ளார். அரச சேவையில் அனுபவம்வாய்ந்த அதிகாரியான செனரத், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் தலைமை அதிகாரியாகவும், மேலதிக செயலாளராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம-4-இ)



சவுதியைச் சேர்ந்த தனவந்தர் ஒருவரின் நிதிப்பங்களிப்போடு, முசலி பிச்சைவாணிப நெடுங்குளம் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட உமர் இப்னு ஹத்தாப் ஜும்மா பள்ளிவாசல் கடந்த வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் பள்ளிவாசலைத் திறந்துவைத்தார்.

பள்ளி வளாகத்துக்குள் நாடாளுமன்ற உறுப்பினரின், 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மலசல கூடத் தொகுதியொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (ம-4-60)

## விபத்தில் சிக்கிய கர்ப்பிணி: வயிற்றிலிருந்த சிசு இறப்பு!

மட்டக்களப்பு, ஜன. 20

விபத்தொன்றில் கர்ப்பிணியின் வயிற்றிலிருந்த சிசுவொன்று உயிரிழந்துள்ளது.

இந்த விபத்து வாழைச்சேனை வாகரைப் பிரதான வீதியிலுள்ள காயங்கேணி பாலத்துக்கு அருகில் நடந்துள்ளது. முச்சக்கரவண்டி மற்றும் கார்மோதி விபத்து நடந்துள்ளது.

படுகாயமடைந்த 9 மாதங்களான கர்ப்பிணியின் வயிற்றில் இருந்த சிசுவே உயிரிழந்துள்ளது. அறுவைச் சிகிச்சை மூலம் உயிரிழந்த சிசு வெளியில் அகற்றப்பட்டது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். (ம-4-இ)

## ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 20

களுத்துறைதெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்றுமாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவரின் பெயர் விவரங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. அளுத்கமவிலிருந்து மருதானை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளார். உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நாகொடை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் களுத்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-22)

## பிரதமரின் செயலாளராக திஸாநாயக்க?

பிரதமரின் செயலாளராகா நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரான அநுர திஸாநாயக்க, நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.அவர், இன்று பிரதமரின் செயலாளராகக் கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார் என்று பிரதமர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-4-இ)

## சு.கவால் பெரமுனவுக்கு எந்த நன்மையுமில்லை!

*அமைச்சர் சந்திரசேன தெரிவிப்பு*


கொழும்பு, ஜன. 20

சுதந்திரக் கட்சியால், எமக்கு எந்த நன்மையும் இல்லை. பெரமுனவால் தான் சுதந்திரக் கட்சி பயனடைந்தது என்று அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட்டிருக்காவிட்டால் நாடாளுமன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சி படுதோல்வி அடைந்திருக்கும். எம்முடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டதால்தான் 14 ஆசனங்கள் அந்தக் கட்சிக்குக் கிடைக்கப்பெற்றன. அவ்வாறு இல்லாவிட்டால் ஒருவர்கூட வெற்றிபெற்றிருக்கமுடியாது. சுதந்திரக் கட்சி தனக்கான நம்பிக்கையை இழந்துவிட்டது. எனவே, உள்ளுக்குள் இருந்து விமர்சனங்களை முன்வைத்துக் கொண்டிருக்காது அவர்கள் வெளியேறவேண்டும் - என்றார். (ம-4-இ)

# ஐயா! இனி ஆருளார் எமக்கு?



புலவராகவும் புரவலராகவும் இருந்த புண்ணியர். வலக்கை கொடுப்பதை இடக்கை அறியாத வள்ளல். நேர்பட பேசும் நேர்மையர். ஒருவரைப்பற்றி ஒருவருக்கு உரைக்காத உண்மையர். தன்னைத்தானே செதுக்கிய சிற்பி. திறந்தோர் பல்கலைக்கழகமாய்த் திகழ்ந்த தீரர். தன் சந்நிதியை 'சங்கப் பலகை'யாய் சாற்றியவர். உங்கள் உரக்கடை தமிழுக்கு 'உர'க்கடை. தங்கள் பசளைக் கடை திருமுறைகளுக்கு 'பசளை'க் கடை. சொற்களின் வேர் தேடியாராய்ந்து எம்மை சொக்கவைக்கும் சுந்தரர். தமிழின் ஆங்கிலத்தின் சுவையறிவிப்பார் முன் தலைசாய்க்கும் சுவைஞர். தாழ்வில் தாங்கியும் உயர்வில் உடனுமிருந்த உற்றார். இந்து மாமன்றத்தை எண்ணற்ற ஆண்டுகள் எழிலுற இயக்கிய ஏந்தல். இந்த மண் வியக்கும்படி மாண்புற நடந்த மணிவிழா, பவள விழா, அமுத விழாக்கள் உங்களுடையதே! வாழும்போது [illegible] ளலே! வானு[illegible] நீங்கள் திருப்புகழ் சொல்லும் அழகு

### நீத்தார் நயப்புரை

சாகும்வரை கண்ணில் நிற்குமே! 'அருகுநுனி பனியனைய சிறிய துளி, பெருகியொரு ஆகமமாகிய பாலரூபமாய்'.. எத்தனை தரம் நீங்கள் சொல்லிக் கேட்டிருக்கிறேன்! நீங்கள் இல்லாத வவுனியா இனி என்றுமே, பச்சைப் பசுமை இல்லாத மருதமே! இந்த இடைவெளி இனி என்றும் அடைபடாத இடைவெளியே! [illegible] புதிய கண்கள் இனி பசார் வீதியில் ஈசன்பசளைக் கடையில் தன்னிச்சையாக உங்களைத் தேடுமே? என் செய்வேன்? முருகனை நாடிய ஈசனாளீ. உலகம் மட்டுமல்ல. அன்பிற்கு முன் அண்டமும் சிறியதே! ஒருநாள் சந்திப்போம்.

**தமிழருவி த.சிவகுமாரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம். மீள் பெறுகை அறிவித்தல்

### 2022ம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு, பாதுகாப்பு, சாரதி, வேலைத் தொழிலாளர் சேவைகளுக்கான விலைமனுக் கோரல்

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் 2022 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு (Cleaning Service) காவற்கடமை, சாரதி, வேலைத் தொழிலாளர் சேவையை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | எதிர்பார்க்கப்படும் / தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| NP/14/41(15)/02/PC/01 | சாரதி சேவை | 03 |
| | வேலைத் தொழிலாளர் சேவை | 03 |
| NP/14/41(15)/02/PC/02 | சுத்திகரிப்பு சேவை | 09 |
| NP/14/41(15)/02/PC/03 | பாதுகாப்பு சேவை | 03 |

01. சேவை வழங்குநர்கள் சுத்திகரிப்பு, காவற்கடமை, சாரதி, வேலைத் தொழிலாளர் சேவையை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நிறுவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
02. சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
03. சேவை வழங்குநர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள தனித்தனி பெறுகை ஆவணங்களை வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 20.01.2022 தொடக்கம் 03.02.2022 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ.2500.00 ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
04. பெறுகை ஆவணங்கள் **03.02.2022 ம் திகதி பி.ப 2.00 மணிக்கு** முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு **"தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"** என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
05. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**க.தர்ஷன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

(cr.37387) (2)

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 01 . 1930



மறைவு 18 . 01 . 2022

### நல்லதம்பி ஐயம்பிள்ளை

புங்குடுதீவு மேற்கு பெருங்காடு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கோலாலம்பூர் (Ceylon Restaurant மலேசியா), கொழும்பு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி ஐயம்பிள்ளை (S.N.A) நேற்று முன்தினம் (18.01.2022) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி (அப்பச்சியர்) செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், சின்னம்மா அவர்களின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான சபாரெத்தினம் (பெரியசபா) பொன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பங்கயற்செல்வி (செல்வி அக்கா) யின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் (S.N.K), முத்துதம்பி, சுப்பிரமணியம், மாணிக்கவாசகர், இரத்தினசிங்கம், மற்றும் கனகரெத்தினம், பத்மநாதன், வரதலட்சுமி, பத்மாவதி ஆகியோரின் சகோதரரும், ஜீவதயாபரன், ஜீவதயானன், ஜீவகாந்தன், ஜீவநந்தினி, ஜீவரஜனி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனலட்சுமி, விஜயலட்சுமி, ரஞ்சனா, சுரேஸ், குகனேசன் ஆகியோரின் மாமனாரும், கேசிகா, விஜீவன், அஜேன், அனித்தா, சயனிகா, கிரிசன், மதுன், கவின், ஆகியோரின் பேரனும், சர்வானந்தன், காலஞ்சென்ற சபாராணி, சபாமணி, காலஞ்சென்ற காந்தி, சொரூபன், ஆகியோரின் மைத்துனரும், தளையசிங்கம் (முன்னாள் கிராம சேவையாளர்.யாழ்) காலஞ்சென்ற நவரத்தினராசா (முன்னாள் மின்பொறியியலாளர் யாழ். மாநகரசபை) ஆகியோரின் சகலனும், ஞானச்சந்திரன், ராஜ்குமார், Dr. இந்திரநாத் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்தில் (யாழ்ப்பாணம்) 18.01.2022 இல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P.: **077 993 2533** (CS 37384) (3) தகவல்: **குடும்பத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக
அலுவலக உதவியாளராக கடமையாற்றிய
**திரு.முருகேசு சபாரத்தினம்**
(சபா அண்ணா)



அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**பிரதேச செயலாளரும்,**
**உத்தியோகத்தர்களும்,**
**பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்,**
**பிரதேச செயலகம் நெடுந்தீவு.**

(cs 1165) (2)

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 06.02.1928 இறப்பு 17.01.2022


எமது பாடசாலை ஆசிரியை திருமதி
சுஜந்தினி ரவீந்திரநாதன் அவர்களின்
பாசமிகு மாமியார்
**அமரர் சண்முகராசா பாலாம்பிகை**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.

## 05 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 25.06.1928 விண்ணில் 15.01.2017

### அமரர் நாகலிங்கம் தவமணிநாயகம்

**(ஓய்வுபெற்ற மின்முகாரி – சீமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை, அரங்க ஒலி ஒளி அமைப்பாளர்)**

அகல்விளக்காய் ஒளிதந்து
ஆலமரம் போல் தழைத்தோங்கி
இகமதில் செழிப்புடன் வாழ
வழிகாட்டிய எம் தெய்வமே
ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எம் துயர்
இதயத்தை விட்டகலா நினைவுகளுடன்
இறைவனை வேண்டுகிறோம்
உங்களின் ஆத்ம சாந்திக்காய்...

திதி: திருதியை

கோணப்புலம் வீதி,
மல்லாகம்.

(CS 1162) (3)

குடும்பத்தினர்

## வெங்கலச் செட்டிகுளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
### செட்டிகுளம்

வரையறுக்கப்பட்ட வெங்கலச்செட்டிக்குளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின், தொழிற்சாலைகளான பப்பட ஆலை மற்றும் அரிசி ஆலை என்பன ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொழிற்சாலைகளை குத்தகைக்கு பெற்று இயக்குவதற்கு ஆர்வமுள்ளவர்கள் சங்கத்தின் தலைமைக்காரியாலயத்திற்கு நேரில் வந்து பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். குறித்த விண்ணப்பங்கள் 05.02.2022ம் திகதி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். தொழிற்சாலைகளை நேரில் பார்வையிடுவதற்கும் மேலதிக விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளவும்.

**பொது முகாமையாளர்,**
**வெங்கலச்செட்டிகுளம் பல நோ.கூ.சங்கம் (வ/து),**
**மன்னார் பிரதானவீதி,**
**செட்டிகுளம்.**

T.P.NO 024-2260901

(CS 00954)(3)

## தவறான முடிவெடுத்து பெண் உயிரிழப்பு

யாழ். ஜன. 20

நோயால் அவதிப்பட்டால் மகளுக்கு இடையூறாக அமையும் எனக் கருதிய பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

ஏழாலை கிழக்கைச் சேர்ந்த குண்டுமணி பரமேஸ்வரி (வயது - 74) என்ற 4 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அயல் வீட்டு நாய் இரண்டு மாதங்களுக்கு முன்னர் கடித்துள்ளது. அதற்கு சிகிச்சை பெற்றிருந்தார். கடந்த சில நாள்களாக கால் வீங்கியுள்ளது. இதனால் படுக்கையில் இருக்கவேண்டி ஏற்பட்டால் மகளுக்கு இடையூறாக இருக்கும் என நினைத்து தவறான முடிவு எடுத்துள்ளார் என்று விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்குக் கொண்டு வரப்பட்டு நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

(ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்கு சின்னம் சூட்டல்



கொடிகாமம், ஜன.20

கைதடி, முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மாணவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் ஐ.தேவாஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வே.கமலேஸ்வரன் கலந்துகொண்டார்.

நிகழ்வில் 26 மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டப்பட்டதைத் தொடர்ந்து, மாணவ தலைவர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வும் இடம்பெற்றது. (ச-159)

## பொங்கல்விழாவும் திறப்பு விழாவும்



மன்னார், ஜன. 20

மெசிடோ நிறுவனத்தின் பொங்கல் விழாவும் புதிய காரியாலயத் திறப்பு விழாவும் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு நடைபெற்றது.

நிறுவனத்தின் புதிய காரியாலயத்தில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டதோடு பொருண்மியம் நலிந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் நடைபெற்ற விழாவில், மெசிடோ பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஓ-ரி1-213)

## பொங்கல் விழாவும் கௌரவிப்பும்



கிளிநொச்சி, ஜன. 20

கிளிநொச்சியில், பொங்கல் விழாவும் விவசாயிகளைக் கௌரவித்தலும் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு தருமபுரம்- நெத்தலியாறு பிள்ளையார் கோயிலில் நடைபெற்றது.

சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும் துரைராசா லிங்கேஸ்வரனின் நிதிப்பங்களிப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில்,தருமபுரம் மூத்த விவசாயிகள் மாலை அணிவித்து நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன், முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்று, பொங்கல் நிகழ்வுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில், முருகானந்தா பள்ளி முதல்வர், தருமபுரம் அ.த.க. பாடசாலை முதல்வர், கமக்கார அமைப்புக்கள், விவசாயிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், முன்பள்ளி ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஒ-ரி1-113)

### எரிபொருளை மீதப்படுத்தும் வகையில்

# மின்சார வாகனங்கள் இனி கூடுதலாக இறக்குமதியாகும்

கொழும்பு, ஜன. 20

**மின்சார வாகனங்களுக்கு முன்னுரிமை அளித்து, இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் -என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.**

9ஆவது நாடாளுமன்றின், இரண்டாவது அமர்வில், கொள்கை அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் வருடாந்த இறக்குமதிச் செலவினத்தில் சுமார் 20 வீதம் கச்சா எண்ணெய் இறக்குமதிக்காக ஒதுக்கப்படுகின்றது.

இறக்குமதி செய்யப்படும் எரிபொருளில் 70 வீதம் வாகனங்களுக்கு எரிபொருளாகவும், 21 வீதம் மின்சாரம் தயாரிக்கவும் 4 வீதம் மட்டுமே தொழிற்றுறை நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. எதிர்காலத்தில் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கும்போது, மின்சார வாகனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வாகனங்களுக்கு மின்சாரம் வழங்கும்போது, இலங்கை முடிந்தவரை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்தத் திட்டமிடவேண்டும் -என்றும் அவர் தெரிவித்துள்ளார். கொரோனாத் தொற்றின் தாக்கம் காரணமாக, 2020ஆம் ஆண்டில் வாகனங்கள் இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4-இ)

## எகிறுகிறது அரிசி விலை



கொழும்பு, ஜன. 20

கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்ட நிலையில், அரிசியின் விலை மேலும் அதிகரித்துள்ளது என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலான கடைகளில் வெள்ளை மற்றும் சிவப்புப்பச்சை அரிசி 160 முதல் 180 ரூபாவுக்கும், நாட்டரிசி 170 முதல் 190 ரூபாவுக்கும், சம்பா அரிசி 230 முதல் 260 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

சில வியாபாரிகள் தன்னிச்சையான விலைக்கு அரிசியை விற்று, மக்களை சுரண்டுகின்றனர். இதனால் மிகவும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளோம் என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர். (ம-4-இ)

## சீனாவிடமிருந்து அரிசி நன்கொடை

கொழும்பு, ஜன. 20

சீனாவிடமிருந்து ஒருமில்லியன் மெற்றிக்தொன் அரிசி, இலங்கைக்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெறும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

குறித்த தொகை அரிசி எதிர்வரும் மார்ச் மாதம் நாட்டை வந்தடையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன அண்மையில் சீனத் தூதுவரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, குறித்த அரிசித் தொகை இலங்கைக்கு கிடைக்கவுள்ளது.

இலங்கையில் கடந்த பெரும்போக நெற்செய்கை காலநிலை மற்றும் உரப்பற்றாக் குறையால் அழிவடைந்துள்ள நிலையில், முன்னேற்பாடாக இவ்வாறு அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளது. (ம-4-இ)


காரைநகர்

**கிழவன்காடு கலாமன்றம்**

நடத்தும்

**சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 175ஆவது இசை ஆராதனை விழா அழைப்பிதழ்**

இடம் :- கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.

காலம் :- 22.01.2022 சனிக்கிழமை பி.ப 2.00 மணி

நல்லூர் வடக்கு

அருள்மிகு ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் கோவில்

மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு

**ஸ்ரீ குகனின் இசையில்**

**"ஸப்தஸ்வரம்"**

**இசைக்கலையகம் வழங்கும்**

**நெஞ்சமெல்லாம் வாழும்**

**பஞ்சதள நாயகன்**

**பக்தி இசை பாமாலை வெளியீட்டு விழா**

காலம்: 20.01.2022 வியாழக்கிழமை மாலை 6 மணி

இடம்: ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் கலாசார மண்டபம்

தலைவர் :

**திரு.சீ.வீ.கே.சிவஞானம்**

(தலைவர் ஆலய அறங்காவல் குழு)

முதன்மை விருந்தினர்கள் - முதல் பிரதி பெறல்

**மருத்துவர் திரு.சர்வானந்தன் சந்திரகுமார்**

(கண் சந்திரசிகிச்சை நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை)

**மருத்துவர் திருமதி மஞ்சுளா சந்திரகுமார்**

**நிகழ்ச்சி நிரல்**

மங்கள விளக்கேற்றல்

தேவாரம்

நாதலய சமர்ப்பணம்

நாதஸ்வரம் : ஆர்.வசந்தன்

மிருதங்கம் : நல்லை க.கண்ணதாசன்

கீபோர்ட் : ஸ்ரீகுகன்

தவில் : ஆர்.ஆனந்தகணேசன்

ஒக்டபாட் : அ.கேதீஸ்

ஆசியுரை : சிவஸ்ரீ முத்து ஸ்ரீநிவாசக குருக்கள்

: தவத்திரு வேலன் சுவாமிகள் (நல்லை சிவகுரு ஆதீன முதல்வர்)

வரவேற்புரை : லயன் கு.ஜெயந்தன் (தலைவர், ஆலய திருப்பணிச் சபை)

தலைமையுரை:

இறுவட்டு வெளியிடுதல்:

சிறப்புப் பிரதி வழங்கல்:

வெளியீட்டுரை : பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன் (முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

சிறப்புரை : திரு. ஆர்.சர்வேஸ்வரா (விரிவுரையாளர், கல்வியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

கலைஞர் கௌரவிப்பு

கலைஞர் உரை : நல்லை. க.கண்ணதாசன் (மிருதங்க விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

நன்றியுரை : திரு. ந. கஜேந்திரகுமார் (செயலாளர், ஆலய அறங்காவல் குழு)

நாட்டியாஞ்சலி : ஏழிசை மிருதங்க-நர்த்தனாலய மாணவிகள்

நிகழ்ச்சித் தொகுப்பு : பிரபல அறிவிப்பாளர் ஜோரன்ஸ்

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் தேவஸ்தான அறங்காவல் குழு.

நிகழ்வு அனுசரணை : Rolex's Bake Mart, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார்...

சத்திரசிகிச்சையின்போது ஒருவர் உயிரிழந்துள்ளார். சங்கானை தொட்டிலடியைச் சேர்ந்த வைத்திலிங்கம் கயூரன் (வயது - 37) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இருதய வால்வு சத்திரசிகிச்சையின்போது ஏற்பட்ட அதிகளவு குருதிப் போக்கே உயிரிழப்புக்குக் காரணம் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் முன்னெடுத்தார்.

இதேவேளை- நெல்லியடியிலுள்ள தனியார் மருத்துவமனையில் சத்திரசிகிச்சையின்போது துணி வைத்து தைத்தமையால் ஒருவர் கடந்த வாரம் உயிரிழந்திருந்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சகல வசதிகளுடன் கூடிய இருதய அறுவைச்சிகிச்சைக் கூடம் உள்ள போதும் மாதத்தில் குறிப்பிட்டளவு சத்திரசிக்சைகளையே மேற்கொள்ளப்படும் நிலையில் தனியார் மருத்துவமனையை நாடும் நிலை உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-26)

மின்வெட்டு...

யலாளர் சங்கம் அறிவித்துள்ளது. நான்கு பிரிவுகளின் கீழ் நேற்று பிற்பகல் 2.30 மணி முதல் இரவு 9.30 மணிவரை மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று சங்கத்தின் பிரதிநிதிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். (ஓ-இ)

வடக்கு...

படுகிறது.

சுகாதார அமைச்சின் செயலாளர் பா.செந்தில்நந்தனன் மாகாண பேரவைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆளுநரின் செயலாளர் திருமதி சரஸ்வதி மோகநாதன் சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். உள்ளூராட்சி அமைச்சின் செயலர் வரதீஸ்வரன், கல்வி அமைச்சின் செயலாளராக மாற்றப்பட்டுள்ளார். பேரவை செயலாளர் பொ.குகநாதன், பிரதி பிரதம செயலாளராக (நிர்வாகம்) நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை, பதில் பிரதி பிரதம செயலாளராகவும் பணியாற்றி வந்த, ம.பற்றிக் டிறஞ்சன் உள்ளூராட்சி ஆணையாளராக மாத்திரம் தொடர்ந்து செயற்படுவார்.

ஆளுநரின் செயலாளராக ஒருவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை. இந்த இடமாற்றங்கள் யாவும் நேற்றே அறிவிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண ஆளுநராக ஜீவன் தியாகராஜா பொறுப்பேற்றதிலிருந்து அமைச்சுக்களின் செயலர்களை கூண்டோடு இடமாற்றி, அதற்குப் பதிலாக புதியவர்களைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார்.

ஆளுநரின் வரம்புமீறிய சில செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த முடியாது என்று அமைச்சுச் செயலர்கள் தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்த பின்னணியில் இந்த இடமாற்றங்கள் தடாலடியாக அறிவிக்கப்பட்டுள்ளன. (ஓ-5)


## மரண அறிவித்தல்



### திருமதி பரமநாதர் நாகேஸ்வரி (நாகம்மா)

காரைநகர் சிதம்பராமூர்த்தி கேணியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாதர் நாகேஸ்வரி ( நாகம்மா) நேற்று (19.01.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 23.01.2022 ஞாயிற் றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இறுதிக்கிரியைகள் தொடர்பான முழுமையான விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

புது வீதி, காரைநகர்.
074 212 0979, 075 239 9555, 0044 7860870571

தகவல்:
குடும்பத்தினர்.


# நீதி நூல் மனனப்போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 20

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக்கழகம் வருடாந்தம் நடத்தி வரும் நீதி நூல் மனனப்போட்டி, தரம் 1 மாணவர்களுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமையும், தரம் 2 மாணவர்களுக்கு 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணிமுதல் நடைபெறவுள்ளது.

போட்டிகள் தரம் 1, 2 என வகைப்படுத்தி இடம்பெறவுள்ளது. இதற்கமைய தரம் 1க்கு ஆத்திசூடி, கொன்றை வேந்தனில் முதல் 15 வரிகளுடன் உலகநீதியில் முதல் பாட்டும், தரம் 2 க்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தனில் முதல் 20 வரிகளுடன், உலகநீதியில் முதல் 2 பாட்டுக்களும் மனனம் செய்து ஒப்புவித்தல் வேண்டும்.

போட்டிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதியாகும். போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும், 40 புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும் எதிர்வரும் மார்ச் மாதம் 1ஆம் திகதி மஹாசிவராத்திரி [illegible]

பற்ற விரும்புவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82 நாவலர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் பரீட்சைச் செயலர் சு.சிறிகாந்தன் தெரிவித்துள்ளளார். (ஒ-ரி1)


## மரண அறிவித்தல்

தோற்றம்
14
06
1944

இறப்பு
19
01
2022



### திருமதி மகேஸ்வரி விவேகானந்தன்

தாவடி தெற்கு முருகமூர்த்தி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி விவேகானந்தன் அவர்கள் நேற்று (19.01.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நாராயணபிள்ளை சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற அழகரட்ணம் - விவேகானந்தனின் (Forman இ.போ.ச. கோண்டாவில்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி (பவளம்) நடராஜா மற்றும் பூமணி ஆகியோரின் சகோதரியும், விமலன் (இந்தியா), விமலினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லக்ஷி (இந்தியா), விக்கினராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், தருணிகா, தருண், பிரகாஷ், கலாஷ் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சண்முகதாஸ், திருநாவுக்கரசு, ஆகியோரின் மைத்துனியும், சந்திரமலர், சாந்திமலர், மகேந்திரன், பிரபாகரன், சுதாகரன் ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2022) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக [illegible] எடுத்துச் செல்லப்படும்.

[illegible]



## மரண அறிவித்தல்

பிறப்பு
21
11
1939

இறப்பு
18
01
2022



### தில்லைநாதன் இராஜசேகரம்

இளைப்பாறிய மேலதிக அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர்

காரைநகர் அறுகம்புலத்தை பிறப்பிடமாகவும், தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாதன் இராஜசேகரம் 18.01.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Advocate தில்லைநாதன், தங்கம்மா ஆகியோரின் பாசமிகு இளைய மகனும், காலஞ்சென்றவர்களான Overseer அருணாசலம், செல்லாச்சி ஆகியோரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி, வைத்திய கலாநிதி ஞானசேகரம் (Orthopaedic Surgeon NHSL) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாநிதி சுரேஷ்குமார் (Nokia - Finland), தமயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், டிலுக்ஷன் (Cranfield University - UK) டிலுக்ஷி ஹர்ஷிதா (St Bridgets' Convent), அபிதா (St.Bridgets' Convent), [illegible] ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான கலாநிதி [illegible] செந்தில்நாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.01.2022 இன்று [illegible] மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை 04 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

[illegible] உறவினர் [illegible] அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

[illegible] - 071 4204[illegible] 071 4[illegible]4039
[illegible] Avenue, Off Station Road, Dehiwala.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாங்கள் வந்தால்...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

'13'ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக்கோரும் தமிழ்க் கட்சிகளின் இந்தியப் பிரதமர் மோடிக்கான ஆவணம், கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது. இதன்போது இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயுடன் சுமார் ஒன்றரை மணி நேரம் தமிழ்க்கட்சித் தலைவர்கள் சந்திப்பில் ஈடுபட்டனர்.

கடந்த டிசெம்பர் மாதம் இந்தியாவுக்கு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச சென்றிருந்தார். இந்தியப் பிரதமரை சந்திக்க அவர் முயற்சித்திருந்தும் அது வெற்றியளிக்கவில்லை. இந்த நிலையில் அதே காலப்பகுதியில் இந்தியப் பிரதமரை சந்திக்க வருமாறு கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதனை கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஒத்திவைத்திருந்தார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசாவின் மகனின் திருமணம் காரணமாக அவர் கலந்து கொள்ள முடியாது என்றும், தனது கடவுச் சீட்டு காலாவதியாகிவிட்டது எனவும், நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட வாக்களிப்பு நடைபெறவுள்ளது என்றும் காரணங்களைக் கூறி அதனை ஒத்திவைத்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இந்தியாவில் நிற்கும்போது கூட்டமைப்பினரும் அங்கு வருவது இந்திய அரசை தர்மசங்கடத்துக்குள்ளாகும். அதனாலேயே வரவில்லை என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்தார். இதன்போது இந்தியத் தூதுவர், தமது அரசுக்கு அவ்வாறானதொரு தர்மசங்கட நிலை ஏற்பட்டிருக்காது என்று பதிலளித்தார்.

இதேவேளை இந்தியப் பிரதமரை சந்திப்பதற்கான கோரிக்கையை மீளவும் இரா.சம்பந்தன் முன்வைத்தார். தற்போதுள்ள கொரோனா நிலைமை சுமுகமாகிய பின்னர் சந்திப்புக்கான ஒழுங்குபடுத்தலை மேற்கொள்வதாக இந்தியத் தூதுவர் தெரிவித்துள்ளார். (ஒ-5)

## புலிகளிடமிருந்து...

திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை அன்று நாம் இந்தியாவுக்கு வழங்கினோம். அது தந்திரோபாய ரீதியில் எடுக்கப்பட்ட முடிவாகும் என்று எதிரணி பிரதம கொறடாவான நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபைஒத்திவைப்பு வேளைபிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நடப்பு பிரச்சினைகளுக்கு தீர்வுகளை கண்டால்தான் அடுத்தக்கட்டம் நோக்கி செல்ல முடியும். ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையும் பெயில். அதனை எப்படி நாம் வரவேற்பது?

இங்கு நாடாளுமன்றத்தை மூடி ஆட்சியாளர்கள் என்ன செய்தனர்? திருகோணமலையில் உள்ள எண்ணெய்த் தாங்கிகளில் 80 ஐ இந்தியாவுக்கு வழங்கிவிட்டனர். தமது ஆட்சியில் தேசிய வளங்கள் பாதுகாக்கப்படும், நல்லாட்சியின்போது விற்கப்பட்ட வளங்கள்கூட மீளப்பெறப்படும் என உறுதிமொழி வழங்கி ஆட்சிக்கு வந்தவர்கள், திருட்டுத்தனமாக திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளை வழங்கியுள்ளனர். 2003ஆம் ஆண்டு எமது ஆட்சியில் 10 எண்ணெய்த் தாங்கிகள் இந்தியாவுக்கு வழங்கப்பட்டன. போர் உக்கிரமடைந்திருந்த காலப்பகுதி அது. எனவே, இந்தியாவுக்கு வழங்கினால் அங்கு புலிகள் தாக்குதல் நடத்தமாட்டார்கள். புலிகளின் தாக்குதலை தடுக்கவே அவ்வாறு செய்தோம். அந்த முடிவில் தந்திரோபாயம் இருந்தது-என்றார். (ஒ-44)

## பலாலி...

மற்றொரு முனையம் (ரேமினல்) அமைக்குமாறும், விமான ஓடுபாதையை விரிவாக்கி அபிவிருத்தி செய்யுமாறும் இலங்கை அரசைக் கோரியுள்ளோம். ஆனால் அவர்களிடமிருந்து இன்னமும் சாதகமான பதில் கிடைக்கவில்லை என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

இந்தியத் தூதுவருடனான தமிழ்க் கட்சிகளின் தலைவர்களின் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன், பலாலி விமான நிலைய அபிவிருத்திக்கு இந்தியா உதவ வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த இந்தியத் தூதுவர், இலங்கைக்கு 400 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்குகின்றோம். அதில் பலாலி விமான நிலைய ஓடுபாதையை விரிவாக்குவது, புதிதாக முனையம் அமைப்பது தொடர்பில் குறிப்பிட்டுள்ளோம். ஆனால் இலங்கை அரசிடமிருந்து இன்னமும் சாதகமான பதில் கிடைக்கவில்லை- என்றார். (ஒ-5)

## வீதி விடுவிப்பு...

விடுவிக்கப்படுவதாகத் தெரிவித்து மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இந்த வீதி விடுவிப்புக்கு யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன் உரிமை கோரியுள்ளார்.

கட்டுவன் - மயிலிட்டி வீதியின் 400 மீற்றர் நீளமான வீதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ளது. இவ்வீதியின் கிழக்குப் பகுதியில் இருந்த இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தின் முட்கம்பி வேலி பின்நோக்கி நகர்த்தப்படவுள்ளது. வேலிக்குள் உள்ள வீதி விடுவிக்கப்படவுள்ளது. இங்கு வீதி அமைக்கும் பணி இராணுவத்தினரின் பொறியியல் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

'தேசிய பாதுகாப்பு நிலைமைகளையும் ஆராய்ந்ததன் அடிப்படையில், 6 மீற்றர் தூரத்துக்கு பாதுகாப்பு வேலியை நகர்த்துவதன் ஊடாக, விடுவிக்கப்படும் 400 மீற்றர் நீளமான நிலப்பகுதி வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்படவுள்ளது. இதேவேளை 1990 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் இருந்த வீதியைபோல தற்போது முழுமையாக விடுவிப்பதற்கு 25 மீற்றர் பின்நகர்த்தவேண்டும் என ஒருசிலர் கூறுகின்றனர். ஆனால் தேசிய பாதுகாப்பை கருத்திற் கொண்டால் தற்போதைய நிலையில் இதற்கு சாத்தியமில்லாத தன்மையே அங்கு காணப்படுகின்றது. அதாவது, கட்டுவன் மயிலிட்டி வீதியின் 400 மீற்றர் சாசசைக்குள்ளான பகுதியின் கிழக்கு புறமாக இராணுவ உயர் பாதுகாப்பு வலய முட்கம்பி வேலி உள்ளது. அதற்கு பின்புறமாக விமானப்படையின் முட்கம்பி வேலி உள்ளது. அதற்கு பின்னால் விமான நிலையத்தின் சுற்று மண் அணை உள்ளது. இவ்வாறான நிலையில் 25 மீற்றர் தூரத்துக்கு வேலியை பின்நகர்த்துவதாயின் விமான நிலைய மண் அணை உள்ளபகுதியிலேயேவேலிநகர்த்தப்பட வேண்டும். தேசிய பாதுகாப்பு தொடர்பான கரிசனையின் அடிப்படையில் இவ்விடயம் சாத்தியப்படாத நிலையில், தொடர்ச்சியான பேச்சுக்களின் அடிப்படையில் 6 மீற்றர் வரை பாதுகாப்பு வேலியை பின்நகர்த்த முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் விமான நிலையத்தை சென்றடைவதற்கான பயணத்தை இலகுபடுத்தும் விதமாகவும், எமது நீண்டகால கோரிக்கையாகவும் அமைந்திருந்த கட்டுவன் மயிலிட்டி வீதியின் 400 மீற்றர் பகுதியை விடுவிக்க நடவடிக்கை எடுத்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கும், இவ்விடயத்தில் பணியாற்றிய அரசு அதிகாரிகள் அனைவருக்கும் எமது மக்கள் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்று அங்கஜன் இராமநாதன் உரிமை கோரியுள்ளார்.

தற்போது 6 மீற்றர் தூரம் பின்நகர்த்தப்பட்டு வீதி அமைக்கப்படும் பிரதேசம் மக்களின் தனியார் காணியாகும். இதற்கு அந்தப் பகுதி காணி உரிமையாளர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளதுடன், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வீதி விடுவிப்பு என்ற பெயரில் மக்களின் காணிகளை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைக்கு துணைபோகும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர் அங்கஜனின் செயற்பாட்டை கண்டிப்பதாக வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார். (ஒ-5)

## வர்த்தக...

ஆரம்பமாகவுள்ளது. கண்காட்சி தொடர்பில் விளக்கமளிக்கும் விசேட ஊடக சந்திப்பு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம் பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் தலைவர் நந்தரூபன், யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சியானது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை வடக்கில் உள்ள மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கின்ற தளம் என்றார்.

இந்தக் கண்காட்சிக்கு யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து எல்.ஈ.சி.எஸ் .நிகழ்வை ஏற்பாடு செய்துள்ள நிலையில் சர்வதேச வர்த்தக மன்றம், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் ஆகியன இதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளன.

அனைத்து பொதுமக்களையும் கண்காட்சியில் இணைந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளதுடன் மேலதிக விவ ரங்களுக்கு www.jitf.lk என்ற இணையத்தளத்தை பார்வையிடவும் அல்லது 077 1093792 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும் - என்றார். (ஒ-20)

## போருக்கான...

விட்டது. உண்மைதான். ஆனால் சமாதானம் பிறக்கவில்லை. அதேபோல போர் ஏற்பட காரணமாக அமைந்த பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படவில்லை. இந்நாட்டில் நிலையான சமாதானமும், பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட வேண்டுமெனில் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு கௌரவமானதொரு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. கொள்கைகளை ஓரமாக வைத்துவிட்டு தமது செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்திருந்தார். எமது கொள்கையென்பது எங்கள் மக்களின் அபிலாசைகளையே பிரதிபலிக்கின்றது.

இனப்பிரச்சினைக்கு நியாயமானதொரு அரசியல் தீர்வு வேண்டும். அந்த தீர்வு சமஷ்டி அடிப்படையில் அமைய வேண்டும் என எமது மக்கள் தெளிவாக எடுத்துரைத்துவருகின்றனர். நாடு சுதந்திரம் பெற்ற காலம் முதல் அதற்காக தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு ஆணை வழங்கிவருகின்றனர். எனவே, இது ஓரங்கட்டக்கூடிய விடயம் அல்ல.

எமது பகுதிகளுக்கு அபிவிருத்தி என்பதும் அவசியம். அந்த விடயத்தை நாம் மறுக்கவில்லை. அதைவிடவும் அரசியல் தீர்வே அடிப்படையாக உள்ளது.

கொரோனாவால் பொருளாதாரம் பின்னடைவைச் சந்தித்துள்ளதாக கூறுகின்றனர். இதற்கு கொரோனாவும் ஓர் காரணம். ஆனால் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமையும், அதனால் ஏற்பட்ட போர் உள்ளிட்ட காரணங்களால்தான் இந்நாட்டில் பொருளாதாரம் மேம்படவில்லை. பொருளாதார பின்னடைவுக்கு மூலக்காரணியே இந்த இனப்பிரச்சினைதான். பண்டா - செல்வா காலம் தொட்டு பல பேச்சுகள், போராட்டங்கள் என பல விடயங்கள் இடம்பெற்றுள்ளன. இருந்தும் நியாயமான தீர்வு இல்லை. அந்தத் தீர்வை நோக்கி நாம் பயணிக்க வேண்டும்.

போர் முடிவடைந்திருந்தாலும் சமாதானம் வந்துவிட்டதாக கூறமுடியாது. போர் ஏற்படுவதற்கு வழிசமைத்த காரணிகள் இன்னும் அவ்வாறே உள்ளன. இதற்கு சரியான பரிகாரம் தேட வேண்டும். புதிய அரசமைப்பு இயற்றப்படும் என ஜனாதிபதி சொல்கின்றார். அதன் ஊடாகவேனும் நிலையான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும், என்றார். (ஒ-44)

## பிரிட்டன்...

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவை ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். (ஒ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை. வீராங்கனை இந்துகாதேவிக்கு சர்வதேச குத்துச்சண்டையில் தங்கம்



**இஸ்லாமபாத், ஜன. 20**

**பாகிஸ்தானில் இடம்பெற்ற குத்துச்சண்டைப் போட்டியில் முல்லைத்தீவு யுவதியான, கணேஸ் இந்துகாதேவி தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.**

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு புதியநகர் கிராமத்தில் தந்தையை இழந்த நிலையில் தாயின் அரவணைப்பில் வாழ்ந்துவரும், இந்துகாதேவி பாகிஸ்தானில் இடம்பெற்ற சர்வதேச குத்துச்சண்டைப் போட்டிக்காகத் தெரிவாகியிருந்தார்.

பாகிஸ்தானின் லாகூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 25 வயதுக்குட்பட்டோருக்கான குத்துச்சண்டைப்போட்டியில் 50 - 55 கிலோ கிராம் எடைப்பிரிவில் அவர் தங்கப்பதக்கம் வென்றார். (ம)



## நினைவேந்தல்

மன்னார், ஜன. 20

ரெலோவின் மூத்தபோராளி கனியூட் மாசிலாமணி டயஸின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, நேற்று முற்பகல் 11 மணிக்கு மன்னாரிலுள்ள ரெலோ அலுவலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் பிரதேசசபையின் உறுப்பினரும், ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளருமான ஏ.ரி.மோகன்ராஜ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், உயிரிழுந்தவரின் புதல்வன், ஈ.பி.ஆர்.எல்.எவ்.கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ், ரெலோ கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டு அவரின் உருவப்படத்துக்கு மலர் தூவி, சுடரேற்றி, மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (ம-ரி1-56)

## கசிப்பு காய்ச்சினாரென இளைஞன் கைது

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டைப் பகுதியில் கசிப்புக் காய்ச்சினார் என ஒருவரை நேற்றுமுன்தினம் மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆனைக்கோட்டை மூன்றாம்கட்டைப் பகுதியில் கசிப்பு விற்பனை இடம்பெறுகின்றது என மானிப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார் அங்குள்ள வீடு ஒன்றை சுற்றிவளைத்தனர்.

அதன்போது ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் அடிப்படையில் அதேபகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ச-125)



## மருத்துவர் வீட்டில் ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, ஜன.20

பொரளையிலுள்ள தேவாலயத்தின் வளாகத்தில் கைப்பற்றப்பட்ட கைக்குண்டு தொடர்பில், சந்தேகத்தின் பேரில் மருத்துவர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

ஓய்வுபெற்ற மருத்துவரின் வீட்டைச் சோதனைக்கு உட்படுத்தியபோது, ஆயுதங்கள் மற்றும் கூரான ஆயுதங்கள், கைத்துப்பாக்கிகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த 11 ஆம் திகதி பொரளை அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த தேவாலயத்துடன் நீண்டகாலமாக தொடர்பு கொண்டிருந்த மருதானையைச் சேர்ந்த நபரும், எம்பிலிப்பிட்டிய பனாமுரவைச் சேர்ந்த நபரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-4-இ)

## 12 மாணவர்கள் திடீர் மயக்கம்!

திடீரென மயக்கமடைந்த 12 மாணவர்கள் வட்டவளை பிரதேச மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டனர்.

ரொசல்ல பின்னோயா தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஐந்தில் கல்வி கற்கும் 12 மாணவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டனர்.

மலையகத்தில் நிலவும் கடும் வெயிலுடனான வானிலையால் மாணவர்கள் மயக்கமடைந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

12 மாணவர்களில் 8பேர் குணமடைந்து, வீடு திரும்பியுள்ளனர் என்று மருத்துவமனைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ம-4-இ)

## தொற்றாளர்களுக்கும் பரீட்சை எழுத வாய்ப்பு

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட, தனிமைப்படுத்தப்பட்ட அல்லது நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு, இந்த ஆண்டு நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரம் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது -என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக வீட்டுக்கும், பரீட்சை எழுதும் மத்திய நிலையத்துக்கும் இடையில் அதிக தூரம் காணப்படுமிடத்து, அவ்வாறானவர்கள் வீட்டுக்கு அருகிலுள்ள விசேட பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுத முடியும் -என்று குடும்ப சுகாதாரப் பணியகத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார். (ம-4-இ)


**சிறுநீரகம் தேவை**

A+ குறுப் வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

074 022 3753 (cs.42343) (2)

**விற்பனைக்கு**

சேர் பொன் இராமநாதன் வீதியில் இராமநாதன் கல்லூரிக்கு அண் மையில் 1 ½ பரப்பு காணி விற்பனைக்கு

077 266 9605 CS 42342) (3)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் அராலி வீதியில் 2ம் ஒழுங்கைப் பகுதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (12 அடி பாதையுடன் நெற்பரப்புடன் கூடிய காணி) மற்றும் முருகமூர்த்தி வீதி. வண்ணார் பண்ணையில் 3 பரப்பு காணி 12 அடி நீள பாதையுடன் விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசி தீர்மானிக்கலாம். யாழ். நகரிலிருந்து 1 1/2 km தூரம்.

தொடர்புகளுக்கு: 074 0089 086, 077 883 4749, 077 862 6251

**வேலையாள்கள் தேவை**

யாழ்நகரில் இயங்கும் வியாபார நிறுவனத்திற்கு வேலைக்கு ஆள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும்
- விற்பனையாளர்
- கணக்காளர்
- காசாளர்
- சிட்டை எழுதுனர்

No.194, K.K.S. Road. Jaffna.
077 336 3766 (cs.1161) (2.)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A-9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி அருகாமையில் நிலப்பரப்பு 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 M தூரம். பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை.

தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 814 7389, 077 614 7333

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் 13 பரப்புக் காணி புதிய வீட்டுடன் நல்ல தண்ணீர் கட்டு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

A-32 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.

முற்றிலும் பயன்தரும் 50 தென்னைகள் உள்ளன.

3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் ஒரு பரப்பின் விலை 3 இலட்சம்.




தொடர்பு:
077 1178 578
077 8147 389


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.